2. இரங்கல் தீர்மானம்

கும்பகோணம், ஸ்ரீ கிருஷ்ணா தனியார் பள்ளியில் ஏற்பட்ட கொடிய தீ விபத்தில் பள்ளிக் குழந்தைகள் உயிரிழந்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானம். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணா தனியார் பள்ளியில் 16–7–2004 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 93 பள்ளிக் குழந்தைகள் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சி அடைகிறது; ஆற்றொணாத் துயரம் கொள்கிறது.*

இக்கொடிய விபத்து பற்றிய செய்தி அறிந்தவுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உடனடியாக அன்றைய தினமே நேரில் சென்று விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு இவ்விபத்தில் குழந்தைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், காயமடைந்த குழந்தைகளுக்கும், ஆறுதலையும், அனுதாபத்தினையும் தெரிவித்தார்கள். மேலும், தீ விபத்தில் இறந்த பள்ளிக் குழந்தைகள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சமும், பலத்த காயம் அடைந்த குழந்தைகளுக்கு ரூபாய் 25,000/–உம், சாதாரண காயம் அடைந்த குழந்தைகளுக்கு தலா ரூபாய் 10,000/–உம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

முற்பகல் 11–05

தீ விபத்தில் காயமுற்ற குழந்தைகளுக்கு மிகச் சிறந்த மருத்துவச் சிகிச்சைகளை வழங்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கும், மருத்துவத் துறையினருக்கும் உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். சென்னையில் இருந்தும், மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்தும் புகழ்பெற்ற மருத்துவர்களை வரவழைத்து, காயமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ உதவி அளிக்க உத்தரவிட்டார்கள். மாவட்ட நிர்வாகமும், மிக விரைந்து செயல்பட்டு, தேவையான வசதிகளையும், உதவிகளையும் வழங்கியது. அது மட்டுமல்லாமல், சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்பட்ட குழந்தைகளைச் சென்னைக்குக் கொண்டு வந்து பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் மூலம்

சிகிச்சை அளிக்கவும் ஆணையிட்டார்கள். அதன்படி, சிறப்பு மருத்துவச் சிகிச்சை தேவைப்பட்ட 2 குழந்தைகள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

விபத்து நடந்த பள்ளியை உடனடியாக மூடவும், அந்தப் பள்ளிக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை ரத்து செய்யவும், அந்தப் பள்ளியின் மாணவ மாணவிகளை வேறு பள்ளிகளுக்கு உடனடியாக இட மாற்றம் செய்யவும் முதலமைச்சர் ஆணையிட்டார்கள். மேலும், இதுபோன்ற துயர நிகழ்ச்சி எதுவும் எதிர்காலத்தில் நடைபெறவே கூடாது என்பதால், தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிக் கட்டடங்களிலும் தக்க பாதுகாப்பை உறுதி செய்திடும்வகையில் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 19-7-2004 முதல் 23-7-2004-க்குள் தங்கள் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் ஆய்வு செய்து கூரைக் கட்டடங்கள் உள்ள பள்ளிகளின் பட்டியலைத் தயாரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து 30-7-2004-க்குள் கீற்றுக் கூரைக் கொட்டகை கொண்ட பள்ளிகள், ஓலைக் கூரைகளை அகற்றித் தீப்பிடிக்காத கூரைகளை அமைக்க வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறினால், அத்தகைய பள்ளிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு, நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

19-7-2004 திங்கட்கிழமை அன்று காலையில், கும்பகோணம் தீ விபத்தில் இறந்த குழந்தைகளுக்காக தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் காலை பிரார்த்தனைக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தவும், அதன்பின் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள மாணவ மாணவியர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

19-7-2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைச்சரவை கூடி தனது ஆற்றொணாத் துயரத்தைத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. இறந்த குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்தத் துயர நிகழ்வு குறித்து விசாரணை மேற்கொள்ள, 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் ஒரு விசாரணை ஆணையத்தை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். விசாரணை ஆணையமாகச் செயல்பட, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி, நீதியரசர் கே. சம்பத் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். தீ விபத்து நடைபெற்ற சூழல் மற்றும் காரணங்கள் குறித்து இந்த ஆணையம் விசாரணை மேற்கொள்ளும். மேலும், இதுபோன்ற ஒரு சம்பவம் இனிமேல் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டிய அனைத்துச் சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இந்த ஆணையம் தனது பரிந்துரைகளை வழங்கும்.

இந்த ஆணையத்தின் விசாரணைக்கு உதவி செய்யும் வகையில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும். இந்த நிபுணர் குழு கல்வித் துறையில் அனுபவம் பெற்ற சமூக சேவகி, தீ விபத்து பாதுகாப்பு முறைகள் அறிந்த நிபுணர், பிரபல குழந்தைகள் மனநல நிபுணர் ஆகியோரைக் கொண்டதாக அமையும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர், தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) ஆகியோர் இந்தக் குழுவில் அலுவல் சார் உறுப்பினர்களாக இருப்பார்கள். பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் இக்குழுவின் அமைப்பாளராகச் செயல்படுவார்.

இதுபோன்ற துயரச் சம்பவம் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்திட ஏதுவாக இந்த ஆணையத்தின் விசாரணை அறிக்கை 4 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் 2 உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய குழு, ஓலைக் கொட்டகைகள் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும், ஓலைக் கொட்டகைகள் உடனடியாக அகற்றப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக தீப்பிடிக்காத பொருட்களைக் கொண்டு மேற்கூரைகள் அமைக்கப்படுவதை அந்தக் குழு உறுதி செய்ய வேண்டும் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதோடு மட்டுமல்லாது, மாநில அளவில் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் தலைமையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர், பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), மின்சார வாரியத் தலைமைப் பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழு மாநிலம் முழுவதும் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு இப்பணிகளைச் சரிபார்க்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிகளில் ஒரே வகையான கால நேரம் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படுவதால் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில், 'ஷிப்டு' முறையைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மதிய உணவு தயாரிக்கும் சமையற்கூடங்களின் மேற்கூரைகள் ஓலையால் வேயப்பட்டிருந்தால், அவற்றை உடனடியாக அகற்றிவிட்டு, தீப்பிடிக்காத மேற்கூரைகளை அமைக்கத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள தீ தடுப்புப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினர் ஆய்வு மேற்கொள்வதைக் கட்டாயமாக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

முற்பகல் 11–10

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும்வகையில் அனைத்து வகையான பாதுகாப்பு நடைமுறைகளும் ஆய்வு செய்யப்படும். அனைத்துப் பள்ளிகளிலும் உள்ளே செல்வதற்கும், வெளியே வருவதற்கும் மற்றும் அவசர காலத்தில் வெளியேறுவதற்கும் தேவையான வசதிகள் இருப்பதை உறுதி செய்யும்வகையில் இந்த ஆய்வு நடத்தப்படும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தீ விபத்திலிருந்து தற்காத்துக் கொள்வது குறித்த பயிற்சிகள் கற்றுத் தரப்பட வேண்டியது மிக அவசியம் என்பதால், தீ விபத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் பயிற்சியை ஆண்டுக்கு இரண்டு முறை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தீயணைப்பு

மற்றும் மீட்புப் பணித் துறை கண்காணிப்பில் உள்ளூர்த் தீயணைப்பு நிலையங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளை நடத்தி, எதிர்பாராத விதமாக ஏற்படும் தீ விபத்துகளை எவ்வாறு கையாளுவது என்பது குறித்தும், தீ விபத்துகளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் பயிற்சி முறைகள் குறித்தும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். தீ விபத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் முறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்கும் வகையில், கல்வி விளக்கப் படங்களைக் குறுந்தகடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை வழங்கும்.

ஒரு பள்ளிக்கூடம் முறையாகச் செயல்படும் என்பதை எல்லாக் கோணங்களிலிருந்தும் உறுதிப்படுத்திய பின்னரே அந்தப் பள்ளிக்கு அங்கீகாரத்தையும், ஒப்புதலையும் கல்வித் துறை அளிக்க வேண்டும் என்றும், கட்டடத்தின் உறுதித் தன்மைச் சான்றிதழைப் பொதுப் பணித் துறை அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்து பெறுதல், பொதுக் கட்டடங்களுக்கான உரிமத்தைச் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெறுதல், துப்புரவு மற்றும் சுகாதாரம் குறித்த சான்றிதழை உள்ளூர்ச் சுகாதார அதிகாரியிடம் பெறுதல் ஆகியவை முறையாக நடைபெற்றுள்ளனவா என்பதைக் கல்வித் துறை அதிகாரிகளும், பிற துறை அதிகாரிகளும் கட்டாயமாக உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். தற்போது, பள்ளிகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை அலுவலர்களிடமிருந்து எந்த அனுமதியோ அல்லது தடையில்லாச் சான்றிதழோ பெற வேண்டியதில்லை என்பதை மாற்றி, இனி அத்தகைய சான்றிதழ் பெற வேண்டியதைக் கட்டாயமாக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த நடைமுறைகளை அமல்படுத்துவதை அலட்சியப்படுத்தும் அல்லது அதில் சுணக்கம் காட்டும் அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

தீ விபத்து நடைபெற்ற பள்ளியின் நிர்வாகத்தின்மீதும், இந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒப்புதல்கள், உரிமங்கள், அங்கீகாரச் சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கிய அதிகாரிகள் மீதும், அந்தப் பள்ளியைக்

கண்காணிப்பதில் அலட்சியமாக இருந்த அதிகாரிகள்மீதும் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இக்கொடிய தீ விபத்தில் உயிரிழந்த பள்ளிக் குழந்தைகளுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தைகளைப் பிரிந்து வாடும் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. மேலும், இவ்விபத்தில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகள் விரைவில் நலம் அடைய வேண்டும் என்ற விழைவை இப்பேரவை சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த அந்த இளந்தளிர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இளம் சிறார்களுக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் பேரவை இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகிறது.

பேரவை மீண்டும் நாளை, வெள்ளிக்கிழமை (23–07–2004) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள் 1973 ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டிட விதிகள் மற்றும் 2002 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி கட்டடட (நீர் சேகரிப்பு) விதிகள் ஆகியவற்றிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி–1) துறையின் 21–7–2003 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.